# திருக்குறள் காட்டும் உலகியல் வாழ்க்கை

முனைவர். செ. மோகன சுந்தரி (தமிழ் ஆர்வலர்)
144-A, முதல் குறுக்கு தெரு, சண்முகா நகர்,
உய்யங்கொண்டான் திருமலை,
வயலூர் சாலை, திருச்சிராப்பள்ளி-620102

7

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறள், தமிழரின் மதிப்புமிகு நூல், உலகின் மகத்தான வாழ்க்கை மரபுகளைச் சுட்டிக்காட்டும் மரபுச் சுருக்கமாக விளங்குகிறது. இது உலக வாழ்வின் அடிப்படையான மதிப்புகளையும், ஒழுக்க நெறிகளையும், சமுதாய வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. திருக்குறள் என்பது தனிநபர் வாழ்விலிருந்து உலக நன்மை வரைக்கும் மிகுந்த தத்துவார்த்தங்களை எடுத்துக்காட்டும் உயரிய நூலாக விளங்குகிறது. அதன் வழிகாட்டுதல்கள் உலக வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அழிவில்லாத அடித்தளமாக அமைகின்றன.

**முன்னுரை**

திருக்குறள் மனிதனின் ஒழுக்க நெறிகளை உன்னதமாக கற்றுத்தருகிறது. "அறம் செய்ய விரும்பு" என்ற அடிப்படையில் வாழ்க்கையை உயர்த்தும் நோக்கத்துடன் சமூக அமைதிக்கான வழிமுறைகளை வழங்குகிறது. தன்னிலை அறிந்து, பிறருக்குப் பயன்படும் வாழ்க்கை முறையை மையமாகக் கொண்டுள்ளது. "தீயினால் சுட்ட புண் அருகா ஆறும், நாவினால் சுட்ட வடு" போன்ற கற்றல்களின் மூலம் மக்களிடையே ஒற்றுமையையும் சமநிலையையும் உருவாக்கும். குடும்ப வாழ்வின் அருமை, பொறுப்புணர்வு, மற்றும் காதலின் மெய்ப்பொருள்களை வெளிக்காட்டுகிறது. இது மனிதனின் சமூக அங்கீகாரத்தையும் மனதாங்கலையும் உயர்த்துகிறது.

**அவர்வயின் விதும்பல்**

இங்குப் பிரிவு மேற்கொண்டிருந்த தலைவன் தலைவியைக் காணவேண்டி விரைதலால் தலைவியைப்போலவே நிகழ்த்தும் கூற்றுக்கள் விளக்கப்படுகின்றன.

**“வினைகலந்து வென்றிக வேந்தன் மனைகலந்து**
**மாலை அயர்கம் விருந்து” (குறள்.1268).**

**ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்**
**வருநாள் வைத்துஏங்கு பவர்க்கு” (குறள்.1269)**

‘தலைவன் வினையை முடித்துக் கொண்டு அதாவது வேந்தன் இட்டபணியை நிறைவு செய்து அவரிடமிருந்து விடைபெற்று விரைந்து சென்று மாலைப்பொழுதில் தலைவியுடன் இரண்டறக் கலந்து இன்பத்தைத் துய்க்க வேண்டும் எனக் கருதுகிறான். இது அத்தலைவனின் மனதில் எழுந்த காம உணர்வினை எடுத்துக்காட்டுகிறது’ (குறள்.1268). மேலும் தலைவன் தலைவியைப் பிரிந்து நெடுநாட்கள் ஆகிவிட்டதால் அவள் ஏங்கியிருப்பாள். எனவே வினையை முடித்துப் போகவேண்டும் என்று விரும்புகிறான். ‘தலைவன் தலைவி இருவரிடையே எழுந்த பிரிவால் தலைவனது மனம் தலைவியை விரைந்து சென்றடைய விழைகிறது. தலைவியாலும் தலைவனை மறக்கமுடியவில்லை. அவள் உள்ளத்தைவிட்டுத் தலைவன் நீங்காத் தன்மை பெற்றிருக்கிறான். மேலும் அவள்மேனியில் பசலை தோன்றுகின்றது. தலைவனும் அதுபோலவே தலைவியின் நினைவுக் காரணமாக வினைமுடித்து தலைவியுடன் கூடி இன்பம் துய்க்கவேண்டும் என்று கருதுகிறான் (குறள்.1269). இவ்விருவரின் மனநிலைகளையும் குறட்பாக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு எல்லாம் உளவியலார் கருதுவது போல அவரவர்களின் நனவிலி மனச்செயல்பாடே காரணமாகும்.

**குறிப்பறிவுறுத்தல்**

தலைவன் தலைவியின் நிலையை அவளுடைய குறிப்புக்களால் அறிந்துகொள்ளுவதைக் கீழ்வரும் குறள் காட்டுகிறது:

**“கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்**
**உரைக்கல் வறுவதொன்று உண்டு” (குறள்.1271)**

வினைமீண்டு மனைக்கு வரும் தலைவன் தலைவியின் தோற்ற மாறுபாடுகளைக் கண்டு

மேற்காணும் குறளில் 'தலைவி தன்தேவையை வாய்விட்டுக் கூற மறுத்தாலும் அவளது கண்கள் அவளைமீறி ஏதோ ஒன்று தன்னிடம் கூறுவதாகக் கருதுகின்றான். மேலும், தன் பிரிவால் தலைவி அடைந்த நிலையை தலைவன் பின்வருமாறு கூறுகிறான்:

**"கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்கு**
**பெண்நிறைந்த நீர்மை பெரிது" (குறள்.1272)**

இக்குறளில் தன் பிரிவிற்குமுன் தலைவியிடம் கண்ணைக் கவரும் அழகும், மூங்கிலைப் போன்ற மினுமினுப்புள்ள தோள்களும் காணப்பட்டன. தான் பிரிந்துசென்ற கால இடைவெளியில் தலைவி அப்பிரிவினை ஆற்றாமையால் அவளதுதோள் அழகு மங்கிப்போய் இருக்கிறாள். ஏனெனில் அவள் தன்னுடைய காமவேதனையை அடக்கிக் கொண்டிருக்கிறாள். இதன் மூலம் தலைவனின் பிரிவே தலைவியின் தோற்றத்திற்குக் காரணம் என்பதைத் தலைவன் புரிந்துகொண்டிருப்பது புலப்படுகிறது.

'கோத்த மணிவடத்தில் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் நூல் இருப்பதுநிச்சயம். அதுபோல வெளிப்புறத்தோற்ற அளவில் ஒன்றும் தெரியாதது போல இருந்தாலும், அவ்வெளிப்புறத்தோற்றத்தைத் தாண்டி உள்ளத்தில் இன்பமோ துன்பமோ ஏதேனும் ஒன்றிருக்கும் என்பது உண்மை'. இவை ஆண்-பெண் இருபாலரிடமும் காணப்படும் (குறள்.1273). இவ்வுணர்வு நனவிலிமனத்தினால் உண்டாவது. மேலும், தலைவன் பிரிவால் உண்டான துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு ஏங்கியிருந்த தலைவி, தலைவன் வந்தவுடன் மகிழாமல் கோபம் கொண்டவள் போல் நிற்கிறாளே என வியந்த தலைவன் தன் வரவால் தலைவி தான் அடையும் மகிழ்ச்சியை மறைத்தாலும் அவளது முகமலர்ச்சி அதனைக் காட்டுகிறது என்கிறான். ஏனெனில் முகமலர்ச்சியில்லை என்றால் அன்புஇல்லை எனப் பொருள்படும். பொய்க்கோபத்தை முகத்தில் காட்டினாலும், அவளது சிரிப்பின் வாயிலாக அவள் அடையும் மகிழ்ச்சியை உணணரமுடியும். இதனைச் சுட்டவே, மலரின் தன்மையை ஒப்பிட்டுத் தலைவன் பேசுகிறான். 'பூமொக்குகள் மணம் உள்ளதுபோல் கோபம் கொண்ட தலைவியின் சிரிப்பால் அவளுடைய இன்பத்தை அறியமுடிகிறது' என்றும் (குறள்.1274). 'ஒன்றோடொன்றுமோதிக் குலுங்கும் வளையல்கள் உடைய இவளது துன்பம் சகிக்கும் தன்மை தனக்கு வரும் துயரத்தைத் தர்க்கக் கூடிய சமய சஞ்சவியாக இருக்கிறது என்றும் கூறும் தலைவன் (குறள்.1275).

'மிகுந்த துன்பங்களைச் சகித்துக் கொண்டிருந்த முன்போல் ஆசையோடு வந்து தலைவி தன்னைத் தழுவிக் கொள்ளாமல் இப்படி நிற்பது தன்னுடைய அன்பின்மையை இடித்துக் கூறுவது போன்று இருக்கிறது' எனக் கருதுகிறான் தலைவன் (குறள்.1276).

**புலவி நுணுக்கம்**

காதல் வாழ்வில் மிக இன்றியமையாத உளவியல் தத்துவத்தைப் புலவி நுணக்கத்தில் வள்ளுவர் கண்ட புதுமை அறிதற்பாலது. வள்ளுவர் பரத்தையர் ஒழுக்கத்தைப் பொருட்பாலில் கண்டிக்கிறார். தலைவியின் உயர்ந்த உள்ளத்தின் நிலையைப் புலவிநுணுக்கத்தில் கீழ்வரும் குறட்பாக்களில் காணமுடிகிறது.

**"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு" (குறள்.1311)**

**"கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்**
**காட்டிய சூடினர் என்று" (குறள்.1313)**

**"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று" (குறள்.1314)**

இக்குறள்கள் தலைவி கூற்றாக உள்ளன. "தம்மைப் பார்க்கிற ஆண்களுக்கு ஆசைமூட்டித் தம் அழகைக் காட்டிக்கொள்ளும் வேசிகளைப் போல பார்க்கிற பெண்களுக்கு எல்லாம் ஆசை மூட்டும் அழகுடையவரே! உம்மைத் தழுவேன் (குறள்.1311) என்று கூறியிருப்பதைக் காணின் பரத்தைதயர் பிரிவினைக் குறள் காட்டும் தலைவன் ஏற்றனனோ என்று ஐயுற நேரிடும்.... இலக்கிய இன்பம் கருதிக் காமத்துப்பாலில் வள்ளுவர் கற்பனைச் சிறப்பிற்காகப் பரத்தையரை இணைத்தார் என்று கூறுதல் பொருந்துமா உளவியலே இதற்குத் தக்க விடை இறுக்க இயலும்" என்று கதிர்மகாதேவன் கூறுகிறார்.

"நண்ணேன் பரத்தநின் மார்பு" என்று கூறுவது ஊடலுக்காகக் கூறப்படும் புனைந்துரை என்றால் பொருந்தாது. பெண்பாலார் உளவியலை அறிந்தவர் வள்ளுவர் கற்பனைக்காகவும், சுவைக்காகவும் இழிந்தன கூறும் இயல்பினர் அல்லர். காதல்தலைவி தன்தலைவன் மிக நல்லவன் என்று உறுதியாக அறிந்திருந்தும், தலைவனைப் பற்றி ஐயப்பாடு கொள்ளுதல் மணமான பெண்டிர் இயல்பு என்ற உளவியலைக் காட்டுதற்கு

ஆகும் எனக்கூற இடமுண்டு. உளவியல் சோதனைக்காக நற்குடும்பத்தில் தோன்றிய மணமான ஆடவரையும் பெண்டிரையும் இது குறித்து வினாவியபோது பத்திற்கு ஒன்பது பேர் வள்ளுவர் காட்டும் பெண்பாலார் இயல்பினை உளவியலை ஒப்புக் கொள்கின்றனர்" என்கிறார் கதிர்மகாதேவன்.

தலைவன்மீது சந்தேகம் கொண்டு தலைவி புனைந்து சொல்லுவனவற்றைக் கீழ்வரும் குறள்கள் உணர்த்துகின்றன. "நான் ஒரு பூமாலையைச் சூடிக்கொண்டாலும், அதை யாரோ வேறொருத்திக்கு காட்டிச் சூடிக் கொண்டதாகக் கோபித்துப் பிணங்குகிறாளே!" (கு.1313). மேலும், 'இப்பிறப்பில் தலைவியைப் பிரியமாட்டேன் என்ற தலைவனிடம் மறுபிறவியிலே பிரிந்துவிடுவாயா! என்றுகேட்டுக் கண்ணீர்விட்டு அழத் தொடங்கினாள் தலைவி. இதனால் எப்பிறவியிலும் தலைவன் தன்னைப் பிரியக்கூடாது என்ற எண்ணம் தலைவிக்கு ஏற்படுஏற்படுகிறது(குறள்.1315). இதுவும் பெண்களின் இயல்புகளில் ஒன்றாகும்'.

மறதிக்குப்பின் தானே நினைவு வரும். அதாவது ஒருபொருளை நினைக்க வேண்டுமானால் அந்தப் பொருளைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் புதைந்து இருக்கவேண்டும். தலைவன் தலைவியிடம் தான் அவளை நினைத்ததாகக் கூறினான். அவ்வளவுதான்! தன்னை ஏன் மறந்தீர் என்று கேட்டுத் தலைவி தலைவனைத் தழுவாமல் பிரிந்து சென்றுவிட்டாள்' என்று தலைவன் (குறள்.1316) வருந்துகிறான்..

பழைய காலத்தில் தும்மல் வருமானால் யாரேனும் நினைப்பதாக நம்புகின்ற ஒரு பழக்கம் இருந்தது. இந்தக் காலத்திலும் கூட சாப்பிடும்போது புரை ஏறினால் யாரோ நினைப்பதாகவோ, திட்டுவதாகவோ நினைத்துக் கொள்ளும் வழக்கமுண்டு. தலைவன் திடீரெனத் தும்முகிறான். உடனே தலைவி யாரை நினைத்துத் தும்மினீர்கள் என வினவி பொய்க்கோலம் கொண்டாள். தும்மல், இருமல், விக்கல் இவை எல்லாம் தாமே வருபவை என்று அறிந்தும் இவற்றால் ஊடல் கொள்வதுகாதலில் இன்பத்தைத் தருவன. இது அக்காதலர்களின் அன்பின் ஆழத்தைக காட்டுகிறது. இதனை,

**"வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீர் என்று" (குறள்.1317)**

என்ற குறளில் வள்ளுவர் காட்டுகிறார்.

'நான் தும்மியதும் என்னை வாழ்த்தியவள். பின் வாழ்த்தியதையும் மறந்துயார் உம்மை நினைக்க நீர் தும்மினீர் என்று கேட்டு உடனே தலைவி அழுதாள்'. நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் நினைப்பதால் தும்மல் வருவது இயல்பு. அதனால் உனக்கு என்னைப் போல் நெருங்கியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உம்மை நினைக்க நீர் தும்முகிறீர்! அதனால் என்னிடம் முழுமையான அன்பு இல்லை எனக் கூறித் தலைவி ஊடல் கொண்டாள் என்கிறான் தலைவன். மேலும் வந்த தும்மலை தலைவன் அடக்கின போது அதற்கும் யாரோ உம்மை நினைக்கிறதை மறைப்பதற்காக தும்மலை அடக்குகின்றீர்களா? என ஊடல் கொள்வது பெண்ணியல்பாக வள்ளுவர் கீழ்வரும் குறளில் காட்டுகிறார்.

**"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்**
**எம்மை மறைத்தீரே என்று" (குறள்.1318)**

அவளது பிணக்குத் தீர்ப்பதற்குத் தலைவன் தும்மினும் அறிவின் நுட்பத்தால் உணர்ந்தும் ஊடல் கொள்ளுகிறாள். இதுவும் அன்பின் மிகுதியால் தோன்றுவதாகும். மேலும், என்னதான் பேசிப் பிணக்கத்தைத் தீர்த்தாலும் அவள் எல்லாவற்றிலும் குற்றம் கற்பித்தும் பிணங்கி இருந்தாள். இதனால் தான் அவளைத் தொடாமல் நினைத்துக் கொண்டிருந்ததாகவும். அப்போதும் கூட அவள்,

**"தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்**
**இந்நீரர் ஆகுதீர் என்று" (குறள்.1319)** என்கிறாள்.

இக்குறள் 'தலைவன் தலைவியைப் புகழ்ந்து பேசினாலும் "மற்றவர்களிடத்தில் நீர் இப்படித்தானே பேசுவாய்" என்று கோபித்து, மேலும் பிணங்குகிறாள்'. இது தலைவியின் சந்தேக மனப்பான்மையை எடுத்துக் காட்டுகிறது. இது அவ்வப்போது மட்டுமே தோன்றுவதாகும். இது நீடித்த சந்தேக மனநிலை அல்ல. மேலும் தலைவன் தலைவியையே நினைத்துக் கொண்டு இருந்தாலும், யாரை நினைத்துக் கொண்டு இருந்தீர் என்று தலைவி கேட்பதுண்டுஇவ்வியல்புகளை வள்ளுவர் பொருத்திக்காட்டுவது புலப்படுகிறது.

**"நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்**
**யாருள்ளி நோக்கினீர் என்று" (குறள்.1320)**

இக்குறளில் ‘தலைவன் யாரையோ நினைத்துக் கொண்டு இருந்துவிட்டு இப்போது தன்னைப் பார்க்கிறார் என்று தலைவி கோபம் கொள்கிறாள். இதுவும் அன்பின் மிகுதியின் வெளிப்பாடே. தலைவியின் பிணக்கம் காரணமாகத் தலைவன் தலைவியின்மீது மேலும் அன்பு கொள்ளகிறான். அவளின் பிணக்கத்திற்குக் காரணம் தானே என அறிந்த தலைவன் அவளின் மனநிலையை உணர்ந்துஅவளின் உடல், உள்ளத் தேவைகளை நிறைவேற்றுகிறான். இதனால் இருவரின் தேவைகளும் நிறைவு பெறுகின்றன என்பது வெளிப்படை. இத்தகைய தலைவனும் தலைவியும் புணர்ந்தபின் பிரிந்திருப்பதில் மகிழ்ச்சி அடைவடைவார்கள்

**ஊடலுவகை**

“ஊடலால் விளைந்த இன்பச் சிறப்பைக் கண்ட தலைவனும் தலைவியும் அவ்வூடலை வியந்து கூறுதல்” ஊடலுவகையாகும். தன்னைப் புணர்ந்த தலைவனிடம் குற்றம் இல்லாவிட்டாலும் குற்றம் இருப்பதாகத் தலைவி பிணங்குவதை,

**“இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்**

**வல்லதுஅவர் அளிக்கு மாறு” (குறள்.1321)**

என்னும் குறள் உணர்த்துகின்றது. ‘தலைவன் ஒரு குற்றமும் செய்யாதவன். ஆயின் தலைவன் மீது தலைவி குற்றம்கூறிப் பிணங்குவது தலைவருக்கிருந்த புணர்ச்சி ஆசைக்கு நிகரான எதிர் ஆசையினால் செய்ததுதான் என்கிறாள் தலைவி. இத்தலைவி தலைவனுடன் பிணங்கித் துன்பப்பட்டுப் பின் புணர்வதால் மனம் மிக்க இன்பம் அடையும் எனக் கருதுவதைக் கீழ்வரும் குறள் உணர்த்துகிறது.

**“ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி**

**வாடினும் பாடு பெறும்” (குறள்.1322)** இங்குத் தலைவன் தலைவியர் கொள்ளும் சிறுபொய்கோபத்திற்குப் பின்பு அவர்தம் உடல்சார்த்தேவை நிறைவு எய்தும்போது மனமும் இன்பமடையும் என்கிறார் வள்ளுவர். சிறுஊடல் கொள்வதன் மூலம் காமம் மிகும். அது உடல்சார் தேவை நிறைவுறுவதில் பயனுள்ளதாக அமையும். இது இருபாலார்க்கும் பொருந்தும். ஒத்த கருத்துடைய தலைவனும் தலைவியும் பிணங்கிப் பிரிந்திருந்துபுணரும் இன்பம் புத்தேள் நாட்டிலும் கிடைக்காது என்பதை

**“புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு**

**நீரியைந் தன்னா ரகத்து” (குறள்.1323)** என்ற குறள் வழி வள்ளுவர்

புலப்படுத்துகிறார்.

நீர்வளமும், நிலவளமும் இருந்தாலஎல்லா உயிர்களின் தோற்றமும், நலமும் நன்றாக அமையும். ஏதேனும் ஒன்றுபாழ் அடைந்தால் உயிர்கள் பல சிக்கல்களில் சிக்கி உயிர் வாழப்போராட வேண்டியிருக்கும் என்பது அறிவியல் உண்மை. அதுபோலவே, உடல்சார்தேவையில் ஒத்த மனநிலையில் இருக்கும் ஆண்-பெண் ஆகியோர் மட்டுமே நிறைவு எய்துவர். இதற்கு நிகரான வேறு இன்பங்கள் ஒன்றும் இல்லை. இதனால் உடலும்-உள்ளமும் அமைதியுறும். இது மனிதனின் வளர்ச்சியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கருத்தை வலியுறுத்தவே உவமையாக நீர்-நில வளம் எடுத்துக்காட்டியுள்ளார் வள்ளுவர்.

**தொகுப்புரை**

மனித வாழ்வில் சிக்கல் ஏற்படும்போது மனம் பாதிப்பு அடைகின்றது. இதனால் உருவாகும் மனஅழுத்தத்தால் மனப்போராட்டம் உண்டாகி ஆளுமைசிதைவு ஏற்படுகிறது. ஒருவரின் நனவிலிமனம் ஆளுமைசிதைவை சில வழிமுறைகளைக் கையாளுகின்றது என்கின்றனர் உளவியலார். இதைத் ‘தற்காப்பு உத்தி’ என்று கூறுவர். இத்தற்காப்பு உத்திகளை வள்ளுவர் தலைவன் தலைவியர் கையாளும் முறையை அவர்தம் குறட்பாக்களால் உணரமுடிகின்றது. ஏறக்குறைய 26 தற்காப்பு உத்திகளை உளவியலார் பகுத்துக் கூறுகின்றனர். வள்ளுவர் காட்டும் தலைவி தனக்கு ஏற்படும் துன்பத்தை ஆற்றுவதற்குச் சில தற்காப்பு உத்திகளைக் கையாண்டு உள்ளமை காணமுடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1.**தண்டபாணி தேசிகர்,ச திருக்குறள் உரைக்களஞ்சியம்**
**பதிப்புத்துறை,**
**மதுரை** 21, 1990.